RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s22232

OPEN ACCESS

# அறச் சமூகத்தைக் கட்டமைத்த புறம்சார் தனிமனித ஆளுமைப் பண்புகள்

**பா. அருண்பிரியா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, தங்கம்மாள் பெரியசாமி நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, விருதுநகர்-626001, தமிழ்நாடு, இந்தியா

# The Extraordinary Individual Personality Traits that make up a Virtuous Society

**B. Arunpriya** [a, *]

[a] Department of Tamil, Thangammal Periyasamy Municipal Girls Hr. Sec. School, Virudhunagar-626001, Tamil Nadu, India

* Corresponding Author: dr.arunpriya007@gmail.com

Received: 11-09-2022
Revised: 19-10-2022
Accepted: 02-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Purananuru is a great historical text which can be considered as a treasury of the life of ancient Tamil people. This text is much loved by other country people, and is translated into many languages and researched for historical purposes. In this book, the royal virtue of the Vendras, the life virtue of the people, both of which are the best individual virtues to operate and the poetical knowledge of poets are explained well. This article psychologically examines how these poets accepted the life virtue given by those people. It also examines how the royal society that has been built by the early poets are continuing till today. It also highlights the merits of Purananuru. Along with these, the leadership virtues of integrity, awareness, nature, and virtue that underpins all of these are also explained well in this article.

**Keywords:** Purananuru, Sangam Literature, Virtue, Integrity

## முன்னுரை

பல்வேறு காலங்களில் பலரால் பாடப்பட்டு தொகுக்கப்பட்ட தொகை நூல்களில் பழந்தமிழரின் அக வாழ்வும், புறவாழ்வும், அவற்றின் வழி அவர்கள் மேற்கொண்டு ஒழுகிய அற வாழ்வும் பெரும்பான்மை எதார்த்தத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளன. அன்பின் ஐந்திணையாக விரிவது அகம் என்றாலும், அந்த அகத்தை முகிழ்க்கச் செய்வது புறமே ஆகும். அறம் என்றும், மறம் என்றும் இருமுனை கொண்ட புற வாழ்வில் கருவி இயக்கி களத்தில் கொட்டும் குருதி மட்டுமல்லாமல், அன்பும், அறனும், அரசு சூல் திறனும், ஈதல் இன்பமும், கற்றாறும் வேந்தனும் கல்வியின் பால் கொண்ட காதல் சிறப்பும் நல்லோர் மொழியில் எல்லோருக்கும் உரியதாய் எடுத்து இயம்பப்பட்டுள்ளன. இயற்றப்பட்டு ஆண்டு பல கழிந்தாலும், இலக்கிய சுவை மட்டும் கூடிக் கொண்டே இருக்கும் புறநானூறு எனும் வீர யுக அறக்களஞ்சியத்தில் பொதிந்துள்ள பழந்தமிழரின் அறச் சமுதாயத்தை கட்டமைத்து உருப்படுத்திய தனிமனித ஆளுமை பண்புகளை உளவியல் நோக்கில் ஆராய்ந்துரைப்பதாய் இக்கட்டுரை அமைகிறது.

## புறம் கூறும் தனிமனித மாண்புகள்

சங்க புற நூல்கள் போர், வீரம், வாள், குருதி என்பதான கருத்துக்கள் சார்பான பதிவுகளை மட்டும் பகிராது தனிமனிதன் கைக்கொள்ள வேண்டிய சில உயரிய ஆளுமைப் பண்புகளையும் நல்

அறங்களையும் அறத்தின் பயன்களையும் இடுகை செய்கிறது. அவ்வாறு இலக்கியங்கள் எடுத்துக்காட்டும் சில தனிமனித மாண்புகள் கீழே தரப்படுகின்றது.

## நல்லொழுக்கம்

ஒரு சமுதாயத்தை மெய்யுருப்படுத்தி கட்டமைக்கும் தனிமனிதர் முதல் அத்தனிமனிதர்களை நெறிப்படுத்தும் தலைமைத்துவம் கொண்ட தனிமனிதனான அரசன் வரை அனைவருக்கும் அவசியமாய் அமைய வேண்டிய ஒரு உயரிய பண்பே ஒழுக்கமாகும். இதையே,

"திருஒக்கும் தீதுஇல் ஒழுக்கம்"

எனக் கருதுகிறது நான்மணிக்கடிகை (Tamilpiriyan, 2007). மனிதனின் எல்லா இன்றியமையா செயல்பாடுகளையும் வடிவமைக்கும் இயக்கம்சார் இயங்கியல் பண்பு ஒழுக்கமாகும். மனிதனின் நன்னடத்தைக்கு அது காரணமாய் அமையும் என்பதை வள்ளுவர்,

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்

என்றும் இடும்பைத் தரும்"

என்பதாய் குறிப்பிடுகிறார் (Parimelalhagar, 2002).

"ஒழுக்கம் என்னும் சொல்லுக்கு நாம் பல பொருள்கள் சொல்லலாம். கை சுத்தம், நாணயம், வாக்கு சுத்தம், நேரம் தவறாமை, ஒழுங்கு முறை, நேர்மை, சுறுசுறுப்பு, தொண்டு என்று பல விளக்கங்களை பலவித கோணங்களிலிருந்தும் சொல்லலாம்" என்று உளவியல் அறிஞர் சந்திரசேகர் ஒழுக்கம் குறித்து விளக்கம் தருகிறார் (Sandhirasekar, 2013). ஒழுக்கம் தவறும்போது, அது மனிதனுக்கு குற்ற உணர்ச்சியை உள்மனதில் எப்போதும் நிலைக்கச் செய்யும். ஒழுக்கம் தவறும்போது அதை மூடி மறைக்க பல நேர்மையற்ற வேலைகளைச் செய்ய வேண்டிய நிர்பந்தம் எழும் அதனால் நிம்மதி குறையும். மன அழுத்தமும், மூளைச் சோர்வும் அதிகரிக்கும். ஒழுக்கம் தவறும்போது அங்கே காலந்தாழ்த்தும் போக்கு வந்துவிடும் என்று உளவியல் ஆராய்ச்சி தெரிவிக்கிறது. இது நாளடைவில் தனி மனிதரின் ஆளுமையைச் சூறையாடி அவர்களை ஒன்றும் இல்லாமல் செய்துவிடும்.

இசைவான மனித உறவும், தனிமனித ஒழுக்கமும், உழைப்பின்மீது நம்பிக்கையும் எந்தச் சமுதாயத்தில் வேரூன்றிச் செழிப்பாக இருக்கின்றனவோ அந்தச் சமுதாயம் எப்படிப்பட்ட அறை கூவலையும் எதிர்கொண்டு முன்னேறி வெற்றி பெறும். ஒரு சமுதாயத்தில் மனித உறவும் தனிமனித ஒழுக்கமும் உழைப்பு நாட்டமும் சிதைந்து போனால் அந்தச் சமுதாயம் செல்வச் செழிப்பில் மிதந்தாலும் மிக விரைவில் வறுமைப்பிடியில் சிக்கிச் சீரழிந்து போய்விடும். தனிமனித ஒழுக்கம் என்பது தனக்குத்தானே ஒருவன் சமுதாய வாழ்க்கைக்கு இசைவாக வகுத்துக் கொள்கின்ற நெறிமுறை. இப்படிப்பட்ட நெறிமுறை ஒருவனிடம் இல்லாமல் போனால் அவன் வாழ்க்கை மனித வாழ்க்கையாக இருக்காது. அவன் விலங்குகள் போல வாழ்ந்து கொண்டிருப்பான். தனிமனித ஒழுக்கத்தை நூற்றுக்கு நூறு கடைபிடிக்க முடியாமல் போனாலும் கடைபிடிக்க வேண்டும் என்ற தாகமாவது ஒருவனிடம் இருக்க வேண்டும். தனிமனித ஒழுக்கத்தில் அக்கரை காட்டாத ஒருவன் பொது வாழ்க்கைக்குப் பொருத்தம் இல்லாதவன்.

பழந்தமிழ் சமுதாயத்தில் வழிபடும் தனிமனிதரும், வழிப்படுத்தும் தனி மனிதரும் (அரசர்) ஒழுக்கத்தை தம் உயிர்பண்பாக போற்றி ஒழுகினர். இதன்வழி பின்வரும் சந்ததியினரும் ஒழுக்கத்தை கடைபிடித்து ஒழுக வழிவகை செய்தனர். பழந்தமிழரின் ஒழுக்க முறையில் வியப்பிற்குரியது ஒன்று உண்டு. அஃது இது 'ஒழுக்கம் என்று கூறாது' முறையாக வாழ்தலே ஒழுக்கம்' என்று செயல்படுத்திக் காட்டியதே மிக்க வியப்பிற்குரியதாகும். தனிமனிதரும், தலைமைத்துவம் கொண்ட தனிமனிதனும் தம் வாழ்வில் முறைமையைக் கடைபிடித்து ஒழுகுவதே ஒழுக்கம். அவ் ஒழுக்கமிலார் வாழ்பவராகக் கருதப்படா மாட்டார். வாழும்போதே தாழ்ந்த நிலையில் வைத்து எண்ணப்படுவார் என்ற மாங்குடிகிழார் கூற்று ஒழுக்கம் குறித்தக்கட்டமைவைச்சுட்டி நிற்கிறது என்பதை,

"ஆங்குஇனிது ஒழுகுமதி பெரும! ஆங்கு அது

வல்லுநர் வாழ்ந்தோர் என்ப - தொல் இசை

மலர்தலை உலகத்துத் தோன்றி

பலர்செலச் செல்லாது நின்று விளிந்தோரே" (Puliyukesigan, 2010)

என்ற பாடலின்வழி அறியலாம். இப்பாடுபொருளின் நின்று நல்லொழுக்கம் தனிமனிதரால் பின்பற்றப்பட வேண்டிய சிறந்த ஆளுமைப் பண்பு என்பதையும் நல்லொழுக்கமே தனிமனிதரின் முதன்மையான ஆளுமைப் பண்பு என்பதையும் அறிய முடிகிறது.

## புறம் கூறும் தலையாய தனிமனித சான்றாண்மைப் பண்புகள்

தனிமனிதர் என்னும் கட்டமைப்பில் தாய், தந்தை, பிள்ளை, என்னும் உறவுப் பகுப்புகளும் ஏவலர், காவலர், கொல்லர் என்னும் தொழில் முறை பகுப்புகளும், அடியார், தவம் புரியும் முனிவர் எனும் சமய முறைப் பகுப்புகளும் இடம் பெறுகின்றன. இவற்றுள் ஒவ்வொரு தனிமனிதருக்கும் அவர் ஆற்ற வேண்டிய சில இன்றியமையாக் கடன்கள் உள்ளன. அக்கடன்களை முதன்மை அறமாக்கி அவ்வற உரையை எக்காலத்திற்கும் ஏற்ற அறிவுரையாக புற நூல்கள் பதிவுசெய்கின்றன. புறப்பாட்டில் ஒரு பாடல்,

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே

வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே

நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே

ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி,

களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" (Puliyukesigan, 2010)

என்று தனிமனித அறத்தை வலியுறுத்துகிறது. இப்பாடலை ஆளுமைப் பண்புகளின் உச்சம் எனக் கருதலாம். காரணம் ஒரு தனிமனிதனின் சான்றாண்மைக்கு ஆதாரமாய் அமைவது பெற்றோரின் வளர்ப்பும், சூழல் கற்றுத் தரும் படிப்பினையுமே ஆகும். இப்பாடலிலும் ஒரு சிறந்த ஆளுமையாளனை உருவாக்குவதற்கு ஏற்ற சில ஆளுமைப் பண்புகள் குறிக்கப்படுகின்றன.

I. "நன்மக்களை ஈன்று உலகிற்கு ஈதல் - தாயின் தலைக்கடன்.
II. அம்மக்களுக்கு கல்வி, அறிவு போதித்து அவர்களை சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடன்
III. முறை பிறழாமல் செங்கோல் ஆட்சி செய்தல் அரசருக்குக் கடன்
IV. அரசாட்சியின் படையைப் பெருக்க படைக்கலன்களை உருவாக்கித் தருதல் கொல்லருக்குக் கடன்
V. கொல்லன் கொடுத்த படைக்கருவிகளை களங்களில் முறையாகப் பயன்படுத்தி எதிரிகளை
VI. வென்று வீரத்தை வெளிப்படுத்துதல் ஆடவருக்குக் கடன்"

என்ற இப்பாடுபொருளின்வழி தாய், தந்தை, அரசன், கொல்லன், ஆடவர் என்ற ஒவ்வொரு தனிமனித அங்கத்திற்கும் தேவையான இன்றியமையாத ஆளுமைக் கூறுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. பொன்முடியார் விளக்கிய இக்கருத்தை ஒத்த மற்றொரு புறப்பாடல் இது. பிசிராந்தையார் தன் நரையின்மைக்குக் காரணமாக மகிழ்ச்சியான பெருவாழ்வையும், அவ்வாழ்க்கைக்கு பெருந்துணை புரியும் சில தனிமனித ஆளுமைகளையும், இப்பாடலில் சுட்டியுள்ளார்.

"யாண்டுபல ஆக, நரை இல ஆகுதல்

யாங்கு ஆகியர்? என வினவுதிர் ஆயின்,

மாண்ட என் மனைவியொடு, மக்களும் நிரம்பினர்

யான்கண்ட னையர் என் இளையரும் வேந்தனும்

அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை

ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்

சான்றோர் பலர்யான் வாழும் ஊரே" (Puliyukesigan, 2010)

இப்பாடலில் சிறந்த பண்புடைய மனைவி, அறிவுத் திறம் மிகப்பெற்ற நன்மக்கள், நினைத்ததைக் கூறாமல் செய்யும் ஏவலர், தீது புரியாது காவல் புரியும் அரசன், அதற்கு மேல் நிரம்பக் கற்று, நற்குணங்களால் அமைந்து குறிக்கோளையும், கொள்கையையும் உடைய சான்றோர் என்று சிறந்த பண்பு கொண்ட தனிமனிதர்கள் சுட்டப்படுகிறார்கள். ஆயினும் இப்பாடலின் நோக்கம் மனிதர்களைச்சுட்டுதல் அன்று. மனைவியின் ஆளுமை சிறந்தபண்புகளுடைமை, நன்மக்களின் ஆளுமை கல்வி அறிவுடைமை, ஏவலரின் ஆளுமை நினைத்ததை நிகழ்த்தும் பான்மை, அரசனின் ஆளுமை தீது தவிர்த்து காவல் புரியும் தன்மை, சான்றோரின் ஆளுமை கல்வி, அறிவு, நற்குணம், குறிக்கோள், உடைமை என்று ஒவ்வொரு தனிமனிதரின் இன்றியமையா ஆளுமைப் பண்புகளை பட்டியலிட்டு அவர்களைப் பின்பற்றி ஒழுகும்படி வற்புறுத்துகிறது. மேற்கூறப்பட்ட இரு பாடல்களும் குழந்தைப் பருவம் முதல் ஒரு தனிமனிதன் பின்பற்றி ஒழுக வேண்டிய நற்கூறுகளைப் பதிவு செய்ததன் காரணம் எக்காலத்தோராலும் அது பின்பற்றப்பட வேண்டும் என்பதற்காம். பழந்தமிழர் பெற்றொழுகிய இவ்வகையான ஆளுமைப் பண்புகள் எக்காலத்தோருக்கும் உரியது என்பது புலவர்மரபு உரைக்கும் மறைமுகமான மெய்ம்மை ஆகும். மேலும், இம்மெய்ம்மைப் பண்புகளை ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும்-தன் மகனைச்

"சான்றோன் எனக் கேட்ட தாய்" (Parimelalhagar, 2002)

என்று, ஈன்று புறந்தந்த தாயின் பெரும் மகிழ்ச்சியையும்,

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து

முந்தி இருப்பச் செயல்" (Parimelalhagar, 2002)

என்று, சான்றோன் ஆக்கும் தந்தையின் கடமையையும் திருவள்ளுவர் சுட்டிக்காட்டுகிறார்.

## செய்நன்றி மறவாமை

மனிதரை நற்கதிக்கு உய்க்கும் பல நற்குணங்களில் தலையாயது நன்மை செய்தல், பிறர்க்கு உதவுதல். இதை செய்நன்றி என்று குறிக்கிறார் வள்ளுவர். ஒருவர் எந்த உதவியும் பிறருக்கு செய்யாத நிலையில் பிறர் செய்யும் உதவி செய்நன்றி ஆகும். இஃது மனித இனத்தை தலைக்கச்செய்யும் மிகச் சிறந்த பண்பாகும். இப்பண்பினும் சிறந்தது செய்நன்றியை மறவாத்தன்மை. பழந்தமிழரிடையே நல்லொழுக்கமும், வாய்மையும் இரு ஆளுமைக்கண்களாக இடம்பெற்றிருந்தநிலையில் செய்நன்றி மறவாத்தன்மை அவர்கட்கு ஓர் மணிமுடியாக விளங்கியது. இதை,

"ஆன்முலை அறுத்த அறன் இலோர்க்கும்,

மாண்இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்,

குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்,

வழுவாய் மருங்கில் கழுவாயும் உள' என,

'நிலம்புடை பெயர்வது ஆயினும், ஒருவன்

செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்' என

அறம்பா டின்றே" (Puliyukesigan, 2010)

என்ற ஆலந்தூர்கிழார் கூற்றின்வழி அறியலாம். ஆவின்மடி அறுத்தல் பிழை. பெண்டீரின் கருச்சிதைத்தல் பெரும்பிழை. குரவர்க்கு தீங்கிழைத்தல் அதனினும் பெரும் பிழை. இவ்வாறு, இழிநிலையில் வைத்து எண்ணப்படும் பல தீங்கிழைத்தோர்க்கும் அவ் அறக்கேட்டி நின்று நீங்கும்வழி உள்ளது. ஆனால், செய்நன்றி மறந்தோர்க்கு அவர் பாவத்தினின்று நீங்கும்வழி இல்லை என்பது இப்பாடலின் பாடுபொருளாகும். இப்பாடுபொருளின்வழி சங்கச்சமுதாயத்தில் மிகச் சிறந்த அறமாக கடைபிடிக்கப்பட்ட செய்நன்றி மறவாத்தன்மை புலனாகிறது.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (Parimelalhagar, 2002)

என்னும் வள்ளுவர் வாக்கும் சங்கப்பாடலுக்குச் சிறந்த சான்றாக செய்நன்றி மறவாத் தன்மையை எக்காலத்தோர்க்கும் உரிய ஓர் ஆளுமைப் பண்பாக பறைசாற்றுகிறது.

## ஒருமைப்பாடு

பழந்தமிழ் சமுதாயத்தில் முற்றிலும் ஒருமைப்பாடு நிலவியது என்று கூற இயலாது. காரணம் உலகால வேண்டும் என்ற பேரவாவின் பின்னணியில் அரசர்கள் பலரும் பகை கொண்டு போர் செய்தனர். அதனால் நாடும், நகரும் குடிகளும் அளிந்தன. மூவேந்தரும் ஒற்றுமையாக நாடாண்ட நிலை குறைவு. பகைத்துப் போரிட்ட நிலையே பெரும்பான்மையும் காணப்படுகிறது. ஒவ்வொருவரும் பிறரை அடக்கி ஆள வேண்டும் என்ற எண்ணம் உடையோராக விளங்கினர். ஒருநாட்டில் ஒருவேந்தன் வலிமையுடையவனாக வளர்ந்து விட்டால். அந்நாட்டில் பிற குடிகளில் தோன்றிய ஏனைய மன்னர்களை அடக்கித் தானே பெருவேந்தனாகத் திகழ விரும்புகிறான். நாட்டின் பெருவேந்தனான பிறகு, ஏனைய நாடுகளைத் தன் கீழ்க் கொண்டு வர விரும்பிப் போர் மேற்சென்றான். இவை மட்டுமின்றி ஒரு வேந்தன் சிறக்க வாழ்ந்தால் ஏனைய வேந்தரும், குறுநில மன்னரும் ஒருங்குகூடி அவனை அழித்திட முற்பட்டனர். ஒரு குடியில் பிறந்தவர்களே தங்களுக்குள் பகைத்துப் போர் மேற்கொண்ட நிகழ்வுகளும் உண்டு. அனைத்திற்கும் மேலாகத் தந்தையை எதிர்த்து மகனும், அண்ணனை எதிர்த்துத் தம்பியும் பகைத்துப் போர்க்கெழுந்த நிகழ்வுகள் பற்றிய பதிவுகளும் தொகை இலக்கியத்தில் காணப்படுகின்றன.

உலகம் அனைத்தையும் ஒரு குடைக்குக்கீழ் ஆள வேண்டும் என்ற பேராசை மன்னருக்கு இருந்த நிலையில் உலக மக்கள் அனைவரும் ஒருமைப்பாட்டால் வாழ வேண்டும் என்னும் பேரவா புலவர் மரபுக்கு இருந்தது.

"(Unity in Variety) என்ற படி வேற்றுமைகளுள் ஒற்றுமை காண்டலன்றோ அறிவு? (Sidhamparam Pillai, 2004)

பழந்தமிழ் புலவர் மரபும் இக்கொள்கையை கடைபிடித்து ஒழுகியது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" (Puliyukesigan, 2010)

என்னும் ஒற்றை அடியில் தமிழ் சமுதாயத்திற்கு ஒருமைப்பாட்டை வலியுறுத்தியது. 'யாது உம் ஊர்?' என்று வேற்றவர் வினவினால் 'யாதும் ஊரே' என்றும் 'யாவர் உன் கேளீர்?' என்று அவர் வினவினால் 'யாவரும் கேளீர்' என்றும் விடை பகர்தல் வேண்டும் அல்லது அவ்வாறு விடை பகரும் அளவிற்கு வாழ்க்கையை நிகழ்த்துதல் வேண்டும் என்று கணியன்பூங்குன்றனார் அரச விரிவாக்க நியதிகளுக்கு அப்பாற்பட்டு தம் ஒருமைப்பாட்டு உணர்வை ஆளுமை ஆக்கி அனைவரும் பின்பற்றும்படி அறிவுறுத்துகிறார்.

## தன்முறை பிழையாமை

தனிமனித வாழ்க்கையில் நிகழும் ஒவ்வொரு வினைக்கும் (அஃது நல்வினையாயினும் தீவினையாயினும்) அவனது முந்தைய வினையே காரணமாகும். இதனை 'கர்மா' என்றும் 'கர்ம வினை

பலன்' என்றும் மத நூல்கள் குறிப்பிடுகின்றன. சமயங்களுக்கு அப்பாற்பட்டு நோக்கினால் தனி மனிதரின் தற்போது நிகழும் வினைக்கும் முன்பு நிகழ்ந்த வினைக்கும் தொடர்புண்டு என்பது உளவியல் ரீதியான உண்மை ஆகும். ஆகையால், ஒவ்வொரு தனிமனிதனும் தன்னை உணர்ந்து தன் முறையினின்று பிழையாமல் வாழ்ந்து வருவாராயின் அஃது அவர்க்கு நன்மை பயக்கும் என்பதை,

"தீதும் நன்றும் பிறர் தர வாரா

நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன" (Puliyukesigan, 2010)

என்னும் புறவடிகள் தெளிவுறுத்துகின்றன. ஒரு மனிதன் தனக்கு நிகழும் நன்மைக்கும் தீமைக்கும் தான் செய்த வினையே காரணம். அஃதாவது, உலக வாழ்க்கையில் தான் ஆற்றிய செயலே காரணம் என்பதை உணர்ந்து மனுதர்மத்தின் படி வகுக்கப்பட்ட நெறிமுறைகளை மீறாமல் வாழ்வது தனிமனிதனின் ஆளுமைத்தன்மையை உயர்த்திக்காட்ட உதவும்.

## உலக இயற்கையை உணர்தல்

'இயற்கை வரைந்து அளிக்கும்' வண்ணச் சித்திரமே மனித வாழ்க்கை. இதில் எதுவும் புதியதன்று. வாழ்தல், காதல், மகிழ்ச்சி, வெறுத்தல் இவற்றால் பெரிதும் ஆழ்ந்து மகிழ்ந்தும் இருத்தல் மனித இயல்பாகாது. ஆகையால் உலகில் நிகழும் அனைத்தும் 'உலகியல்' என்று அறிந்து தெளிந்து அதன் போக்கில் வாழ்வை விட்டுவிடல் மனிதப் பண்புக்கு உகந்த ஒரு செயல்பாடு ஆகும். இதனை,

"சாதலும் புதுவது அன்றே வாழ்தல்

இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்,

இன்னாது என்றலும் இலமே

நீர்வழிப்படூஉம் புனைபோல், ஆர் உயிர்

முறைவழிப் படூஉம் என்பது' திறவோர்

காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்

பெரியோரை வியத்தலும் இலமே

சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" (Puliyukesigan, 2010)

என்னும் புறப்பாட்டடிகள் தெளிவுறுத்துகின்றன. மனிதவாழ்க்கையில் முயற்சி, வினைபுரிதல், முன்னேற்றம், ஆகிய உழைப்பு சார்ந்த கோட்பாடுகளை விளக்கிப் பார்த்தால் தனிமனிதர் சிலரிடம் விரக்தி உணர்வும் இன்பமற்ற நிலையும் காணப்படும். இந்நிலையைத் தவிர்த்து மனிதகுலம் மகிழ்வதற்கு சில வழிமுறைகள் இப்பாடலில் குறிக்கப்பட்டுள்ளன. அவை,

I. சாதல் புதுமையானது என்னும் எண்ணத்தைத் தவிர்த்தல்
II. வாழ்தல் இனிமையானது என்று கருதி அதில் ஆழ்ந்து மகிழ்ந்திருத்தலைத் தவிர்த்தல்
III. வாழ்க்கைத் துன்பமானது என்று கருதி ஆழ்ந்த வெறுப்புடைமையைத்தவிர்த்தல்
IV. நீரின் வழியில் செல்லும் தெப்பம்போல் வாழ்க்கை அதன்வழி செல்கிறது என்னும் உண்மையை உணர்தல்.
V. உலகில் மிக உயர்ந்தோரின் செயல்களைக் கண்டு வியப்படைதலைத் தவிர்த்தல்
VI. அஃதேபோல் சிறுமைப்பட்டோரின் செயல்களை இகழ்வதையும் தவிர்த்தல்

என்பனவாம். புலவர் மரபால் உரைக்கப்பெற்ற இவ் அறிய உண்மைகளை அறிந்த மனம் அமைதியுடன் சலன மற்றுக் காணப்படும். சலன மற்ற மனித மனம் இன்ப, துன்பமற்ற சமநிலையான வாழ்க்கையை உருவாக்கும். ஆகையால் உலகியலை உணர்ந்து வாழும் மனித வாழ்வே மெய்யான வாழ்வாகும். அதற்கு துணைபுரியும் மெய்யறிவே சிறந்த ஆளுமை ஆகும்.

"இன்னாது அம்ம, இவ் உலகம்

இனிய காண்க இதன் இயல்பு உணர்ந்தோரே” (Puliyukesigan, 2010)

என்று பக்குடுக்கை நன்கணியாரும் உலகியல் இயல்பை தன் பாடலில் சுட்டியுள்ளமை ஈண்டு நோக்கற்பாலது.

## மெய்யறிவு பெறல்

உலகியல் இது என்று உணர்தற்கும் அதன்படி தன் வாழ்வியலை நிகழ்த்தற்கும் மெய்யறிவு அவசியமாகிறது. பழந்தமிழ் மக்கள் இறை உணர்வில் ஆழ்ந்து வழிபடும் போதும் தாம் மெய்யறிவு பெற வேண்டும் என்று இறைவன்பால் வேண்டும் இயல்பு கொண்டவராய் விளங்கினர். இதை,

“கொடும்பாடு அறியற்க எம் அறிவு”

என்ற பரிபாட்டு அடியின்வழி அறியலாம். உலகியலில் மெய், பொய் எதுவென்று அறிந்து கொள்ளும் அறிவை இறைவனிடம் வேண்டி பழந்தமிழர் வழிபட்டனர் என்னும் கூற்றின்வழி கீரந்தையார் மெய்யறிவு பெறும் குணத்தை பெற்றுக்கொள்ளுதலே மனித வாழ்விற்கு நன்மை பயக்கும் என்பதை சுட்டுகிறார்.

“மெய்யே உணர்ந்தார் மிக உரைப்பர்” (Kanimetaviyar, 1887)

எனும் ஏலாதி உரைக்கும் மெய்யறிவுப்பற்றிய அறவிளக்கமும் மேற் கூறிய கூற்றுக்கு சான்றாய் அமைகிறது.

## சான்றோர் சிறப்பியல்புரைக்கும் சான்றாமை பண்புகள்

தனிமனிதருக்கு இன்றியமையா சில ஆளுமைகள் அரசரின் வாழ்க்கையின் வழியும் அரசருக்கு அறிவுரை கூறும் புலவர் மரபின் கூற்றுகளின் வழியும் புலவர் பெருமக்களின் வாழ்வியலின் வழியும் தொகை நூல்களில் அறிவுறுத்தப்பட்டுள்ளன. மனித வாழ்க்கையை மேம்படுத்த நேர்முகமாகவும் முன்னிலைப் புறமொழியாகவும் உரைக்கப்பெற்ற சில இன்றியமையா ஆளுமைத் திறன்கள் கீழ்க்காணுமாறு,

பெறற்கறும் பொருளோ உணவோ கிடைத்தாலும் பிறரோடு பகிர்ந்துண்ணல், வாழ்க்கையில் வெறுப்பின்றி இருத்தல், மனச்சோர்வு இல்லாதவராய் அமைதல், தீமைக்கு அஞ்சுதல், புகழ் என்றால் உயிரையும் கொடுத்தல், பழி என்றால் உலகத்தையே கொடுத்தாலும் கொள்ளாதிருத்தல், தமக்கென முயலாது பிறர்க்கென்று முயலுதல் என்பதான சில மேம்பட்ட மனித வாழ்வை மேம்படுத்தும் ஆளுமைக் கூறுகளை,

“உண்டால் அம்மஇவ் உலகம் - இந்திரர்

அமிழ்தம் இயைவது ஆயினும், ‘இனிது’ எனத்

தமியர் உண்டலும் இலரே முனிவு இலர்

துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்

புகழ் எனின். உயிரும் கொடுக்குவர் பழிஎனின்,

உலகுடன் பெறினும், கொள்ளலர் அயர்விலர்

அன்னமாட்சி அனையர் ஆகித்

தமக்குஎன முயலா நோன்தாள்,

பிறர்க்குஎன முயலுநர் உண்மையானே” (Puliyukesigan, 2010)

என்ற புறப்பாட்டு அடிகள் விளக்கி நிற்கிறது. ‘மனம்’ போன போக்கில் செல்லவிடாது மனதை அடக்கும்வலிமை கொண்ட அரசன் ஆதனுங்கன் என்று பாராட்டும் முகமாக கள்ளில் ஆத்திரையனார்,

"செல்வுழி எழாஅ நல்ஏர் முதியன்" (Puliyukesigan, 2010)

என்று மன அடக்கத்தை வலியுறுத்துகிறார். உலக உயிர்கள் பெரும்பான்மையும் அஞ்சுவது உயிர் கொல்ல வரும் கூற்றிற்கு. அக்கூற்றைக் கண்டும் அல்லது அதை ஒத்த சில இடர்களைக் கண்டும் தனிமனிதர் தம் வாழ்வில் அஞ்சாது இருத்தல் வேண்டும் என்பதை,

"ஆர்உயிர்க்கு அலமரும் ஆராக் கூற்றம்!

நின்வரவு அஞ்சலன் மாதோ" (Puliyukesigan, 2010)

என்ற புறவடிகளின்வழி பாராட்டும் முகமாக புலவர்மரபு பதிவு செய்துள்ளது.

## முடிவுரை

மென்மையான விதிமுறைகள் ஆகும் என்பதன் தொடர்ச்சி. வறுமையிலும் செம்மையான வாழ்வை மேற்கொண்டு ஒழுகிய புலவர் பெருமக்கள் தாம் கற்றும் பெற்றும் சேகரித்த அறிவுச் செல்வங்களை அறத்தின் வாயிலாக மன்னர் என்றும் மக்கள் என்றும் பாராமல் எல்லோருக்கும் பொது வென வழங்கிய தன்மை மிகுந்த பாராட்டிற்குரியது. அன்று அவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஒவ்வொரு அறமும் காலம் கடந்தும் ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்வையும் செம்மைப்படுத்தக்கூடிய சீரிய ஆளுமை பண்பாகும். இக்காரணம் கருதியே புறம் கூறிய அறம் ஒவ்வொன்றும் தனி மனித ஆளுமை என்று உரைக்கப்பட்டது.

## References

Kanimetaviyar, (1887) Eladi, Kalaratna Printing Press, Chennai, India

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India

Puliyukesigan, (2010) Purananuru moolamum uraiyum, Sharada Publishing, Chennai, India

Sandhirasekar, (2013) Aalumai Thiranai Valarthu Kolvadhu Eppadi, Karpagam Puthakalayam, Chennai, India

Sidhamparam Pillai, V.S. (2004) Arasiyal Perunchol, V. O. C. Noolagam, Chennai, India

Tamilpiriyan, (2007) Aasara Kovai Naanmanikadigai Moolamum-Uraiyum, Karpagam Puthakalayam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License